# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 11.12.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால் வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்களின் மூலம் நியமனம் செய்யப்பட்ட மெசர்ஸ், சன்கான் என்ற தொழில்நுட்ப ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா,ந6) அரசாணை (டி) எண்.6 நாள் 23.01.2018இல் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலக வங்கி நிதி ஆதாரத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கடன் மற்றும் மான்யம், உள்ளாட்சி பங்கு தொகையுடன் முதல்கட்ட (Phase-1) பணிகளாக செயல்படுத்த ரூ.96.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையிட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.<br>அதன்பேரில் மேற்படி பணிகளை 6 சிப்பங்களாக பிரித்து தொழில்நுட்ப அனுமதி பெற மேல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. மேற்படி சிப்ப பணிகளில் சிப்பம் எண்.1 மற்றும் 5க்கான பணிகள் NH-45B மற்றும் NH-7A ஆகிய பகுதியில் அமைப்பதற்கு மேற்படி தேசிய நெடுஞ்சாலைத்துறையின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய நிலையில் அவ்விரு சிப்பங்களை தவிர்த்து சிப்பம் 2,3,4 மற்றும் 6க்கான பணிகளுக்கான தொழில்நுட்ப அனுமதி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் செயல்முறை எண்9592/2018/டிஒ1, நாள் 20.04.2018இல் ரூ. 42.15 கோடிக்கு அனுமதி வழங்கி உத்தரவு வரப்பெற்றது.<br>அதே போன்று சிப்பம் எண். 1 மற்றும் 5க்கான பணிகளுக்கு ஸ்மார்ட்சிட்டி 4வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் அவர்களின் கடிதத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கண்ட சிப்பம் எண்.1 மற்றும் 5க்கான NH-45B மற்றும் NH-7A ஆகிய இருபகுதிகளிலும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு ரூ 133.53 கோடி | 216)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>தற்போது மேற்கண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மாநகராட்சிப் பகுதியில் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றபடியால், மாநகராட்சியில் போதிய தொழில்நுட்ப பொறியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு Project Managemenr Consultant ஒருவரை TNUIFSL மூலம் நியமனம் செய்து தருமாறும், அதற்கான செலவினங்களை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/9047/2014 | |
| | 2) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 3.12.2018ம் தேதிய டி3/5024/18 எண் கடிதத்தில், தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் கிராமம் II புல எண் 1705/3A1 ரயத்து புஞ்சை தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்குரிய 0.40.5 ஹெக்டேர் பரப்பளவு உள்ள இடத்தில் துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம் கட்டுவதற்கு 50 சென்ட் இடம் நில மாற்றம் செய்வதற்கு தூத்துக்குடி மாநகராட்சியில் இருந்து தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை வழங்க கோரப்பட்டுள்ளது. எனவே, மீளவிட்டான் கிராமம், புல எண். 1705/3A1 இடம் தமிழ்நாடு பூமி தான வாரியம என்று வகைபாட்டில் அமைந்துள்ள இடத்தின் 50 சென்ட் நிலப்பரப்பினை துணை இயக்குநர் சுகாதார பணிகள் பெயரில், நில மாற்றம் செய்வதற்கு மாநகராட்சியிலிருந்து ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1. 4686/2018 | 217)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60வார்டு பகுதிகளிலும் உள்ள தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிகளை கண்காணித்தல், இதர தெருவிளக்குகள் சம்பந்தமான பணிகள் அனைத்து மாநகராட்சி கட்டிடங்களில் மின் பராமரிப்பு பணிகள் செய்தல் மற்றும் மின் வாரியம் சம்பந்தமான பணிகளை கண்கானித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் பணிகளை கவனிக்க இரண்டு மின் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்படும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது.<br>மேலும் தற்போது அரசின் “SMART CITY MISSION” திட்டப் பணிகள் அதிகளவில் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஏற்கனவே உள்ள இரண்டு களப்பணியாளர்களை மட்டும் வைத்து முழு அளவில் பணிகளை விரைவுபடுத்த இயலாத | 218) அலுவலகக் குறிப்பு 1 ஒப்புதல் வழங்கப்பட்டது<br><br>அலுவலகக் குறிப்பு 2 அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சூழலும் எழுகிறது இதனைத்தொடர்ந்து மாதாந்திர மின்கட்டணங்களை கணினியில் பதிவு செய்து சரிபார்க்க பணியாளர் இல்லாத நிலையும் உள்ளது. எனவே மேற்சொல்லப்பட்ட அத்தியாவசிய காரணங்களை கருத்திற்கொண்டு நிர்வாக நலன் கருதி கீழ்க்கண்ட இரண்டு பணியாட்கள் அவசியம் தேவைப்படுகிறார்கள்.<br>1) தொழில்நுட்ப பணியாளர் (மின்னியல் பட்டம் பெற்றவர்) – 1 எண்ணம்<br>2) கணினி புள்ளி விபர பதிவாளர் (Data Entry Operator) – 1 எண்ணம்<br>மேற்படி பணியாட்களை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் (City Live hood Center) PWD SOR/ District Collector approved rate ஊதியம் அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 3,06,000/– க்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3654/2018/E5 | |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட சாலைகள் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகளின் பொருட்டு தோண்டப்பட்டு சேதமடைந்த நிலையில் உள்ளப்படியால் அதனை பயன்படுத்தும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமமாக உள்ளது. மேலும் சேதமடைந்த சாலைகளில் மழை நீர் தேங்கி பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையிலும் உள்ளது. எனவே இந்த சாலைகளை அவசியம் போக்குவரத்திற்கு ஏற்ற சாலையாக அமைக்க வேண்டியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி கீழ்க்கண்ட பகுதிகளில் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைப்பதற்கு ரூ. 1420.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 219) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 வடக்கு தெரு (அத்திமரப்பட்டி) புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 9.00 |
| 2 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 57 சந்தோஷ் நகர் புதிதாக தார் சாலை அமைத்தல் | 11.50 |
| 3 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 57 அம்பேத்கார் நகர் புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 23.50 |
| 4 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 58 நேருஜி நகர் புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 22.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் 1வது தெரு புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 19.50 | |
| | 6 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் 3வது தெரு புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 17.50 | |
| | 07 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் 4வது தெரு புதிதாக பேவர் சாலை அமைத்தல் | 14.00 | |
| | 08 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் பிரதான சாலை (அபிராமி நகர் சந்திப்பு முதல் ராஜிவ் நகர் வரை சாலையினை சீர் அமைத்தல்) | 16.00 | |
| | 09 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 காமராஜர் சாலை முதல் சிஎஸ்ஐ ஆலயம் வரை புதிதாக தார் சாலை அமைத்தல் | 29.50 | |
| | 10 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 காமராஜர் சாலை முதல் சிஎஸ்ஐ ஆலயம் முதல் பொன்நகரம் வரையுள்ள புதிதாக தார் சாலை அமைத்தல் | 48.00 | |
| | 11 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 எம்.சவேரியார்புரம் கணேஷ் நகர் மேற்கு தொடர்ச்சி பகுதியில் புதிதாக தார் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 49.50 | |
| | 12 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 சுபாஷ் நகர் 1வது மற்றும் 3வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 21.20 | |
| | 13 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 சுபாஷ் நகர் சந்து பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.10 | |
| | 14 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 பாரதி நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 16.70 | |
| | 15 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 சாந்தி நகர் 1வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 8.10 | |
| | 16 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 பொன்நகர் மற்றும் வ.ஊ.சி நகரில் தார் சாலை அமைத்தல் | 36.50 | |
| | 17 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 எல்ஆர்சி நகரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 23.60 | |
| | 18 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 55 மாரியம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.20 | |
| | 19 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 மேலத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 10.00 | |
| | 20 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 அத்திமரப்பட்டி (அம்மன் கோவில் தெரு) பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 20.00 | |
| | 21 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 துர்க்கையம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.60 | |
| | 22 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 அத்திமரப்பட்டி சண்முகபுரம் கிழக்கு சந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.40 | |
| | 23 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 முனியசாமி கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல் | 7.30 | |
| | 24 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 காமராஜர் சாலை குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 31.10 | |
| | 25 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 56 காமராஜர் சாலை (திருச்செந்தூர் சாலை சந்திப்பு முதல்) தார் சாலை அமைத்தல் | 41.00 | |

| | | | |
|---|---|---|---|
| 26 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 57 ஆதிபராசக்தி நகர் மேற்கு மற்றும் சக்தி நகர், மகா நகர் தார் சாலை அமைத்தல் | 41.40 | |
| 27 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 57 எழில் நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 16.60 | |
| 28 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 58 சுவாமி நகரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 23.50 | |
| 29 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 58 நேருஜி நகர் குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 23.00 | |
| 30 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 58 பாலாஜி நகரில் தார் சாலை அமைத்தல் | 11.50 | |
| 31 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 58 பார்வதி புரம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.50 | |
| 32 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் மேற்கு பகுதியில் தார் சாலை அமைத்தல் | 20.50 | |
| 33 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் 6வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 12.50 | |
| 34 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் 7வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 19.70 | |
| 35 | தெற்கு மண்டல பகுதி வார்டு எண் 59 ராஜிவ் நகர் மெயின் மற்றும் சாமி நகர் ஜங்சன் வரையுள்ள சாலையினை மேம்படுத்துதல் | 42.50 | |
| 36 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 5ஹவுசிங் போர்டு காலனி (மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில்) புதிதாக தார் சாலை அமைத்தல் | 37.50 | |
| 37 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 5 கேடிசி நகர் மற்றும் ஆர்.எஸ்.பி.ஆர் நகர் (அன்னை பள்ளி அருகில்) புதிதாக தார் சாலை அமைத்தல் | 46.00 | |
| 38 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 2 நேதாஜி நகர் 1,2,3 மற்றும் 7வது குறுக்கு தெரு பகுதியில் புதிதாக தார் சாலை அமைத்தல் | 44.50 | |
| 39 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 5 கேடிசி நகர் மற்றும் ஆர்.எஸ்.பி.ஆர் நகர் குறுக்கு தெரு புதிதாக தார் சாலை அமைத்தல் | 45.20 | |
| 40 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 2 நேதாஜி நகர் 3 மெயின் மற்றும் 7வது குறுக்கு தெரு புதிதாக தார் சாலை அமைத்தல் | 28.50 | |
| 41 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 5ஹவுசிங் போர்டு காலனி குறுக்கு தெரு மற்றும் பூங்காவை சுற்றியுள்ள பகுதியில் புதிதாக தார் சாலை அமைத்தல் | 35.50 | |
| 42 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 2ஐயப்பன் நகர் 1வது தெருவில் புதிதாக தார் சாலை அமைத்தல் | 28.00 | |
| 43 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 1 ஆதிபராசக்தி நகர் (மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில்) புதிதாக தார் சாலை அமைத்தல் | 37.00 | |
| 44 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 1 பண்டாரம்பட்டி தார் சாலை அமைத்தல் | 48.60 | |

| | | |
|---|---|---|
| 45 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண் 1 பண்டாரம்பட்டி குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல் | 27.00 |
| 46 | வடக்கு மண்டல பகுதி வார்டு எண்1 அய்யா சாமி காலனி தார் சாலை அமைத்தல் | 45.50 |
| 47 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 2 அன்னை இந்திரா நகர் மெயின் சாலை, தேவர் காலனி தார் சாலை அமைத்தல் | 49.00 |
| 48 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 2 இந்திரா நகர் 2,3,4 வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 37.00 |
| 49 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 முத்தம்மாள் காலனி 2,3,4வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 41.50 |
| 50 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 ஹவுசிங் போர்டு காலனி II தார் சாலை அமைத்தல் | 45.50 |
| 51 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 ஹவுசிங் போர்டு காலனி II (கிழக்கு மேற்கு சாலை) தனா கார் அருகில் தார் சாலை அமைத்தல் | 42.00 |
| 52 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 கே.டி.சி நகர் தார் சாலை அமைத்தல் | 31.00 |
| 53 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5 கே.டி.சி நகர் டிப்போ ரோடு தார் சாலை அமைத்தல் | 22.00 |
| | **மொத்தம்** | **1420.30** |

எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளை மதிப்பீட்டு தொகை ரூ. 1420.30 /— இலட்சத்தில் அரசு மான்யம் / பொதுநிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி மதிப்பீட்டு தொகையினை மான்யமாக வழங்க கோரி அரசுக்கு பிரேணை அனுப்பவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு மான்யத்திற்கு மேல் தேவைப்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்,இ2/4933/2018

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 11.12.2018